The Registrar of Books,
Madras 6.
324

பதிவு எண் — M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்

ஆசிரியர் : இளவழகனார்.

| கிளை—ரு | துருதலம், மாம்பாக்கம் ; கர, ஆவணி ; 24—8—51. | தளிர்—சரு |
|---|---|---|

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

## மனமகிழ்ச்சியும் நகையும்

### (Cheerfulness and Mirth)

'மனமகிழ்ச்சி' யென்னும் நிலையினை வெறும் நகை பயக்கும் நிலையை விட மேலாகவே நான் கருதுகிறேன். பின்னது, வெறும் நடிப்பளவாக உள்ளது. முன்னதாகிய மனமகிழ்ச்சி, உள்ளத்திற்குரிய குணங்களில் ஒன்றாகக் கருதக்கூடியது. 'நகை' குறுகியதும் மாறும் இயல்பினதுமாகும். 'மனமகிழ்ச்சி' உறுதியானதும் நிலையுள்ளதுமாகும். மிக்க துன்ப மயமான சோர்வுக்கு அடிமையாகி மெலிபவர், 'நகை' யினால் சோர்வு நீத்து எழுகிறார்கள். ஆனால் உள்ளத்துக்கு மன மகிழ்ச்சி நகையைப் போலச் சடுதியில் இன்பத்தைத் தராவிடினும், துன்ப வெள்ளத்தில் வீழ்ந்து ஆழ்ந்து போகாமல் நம்மைத் தடுக்கவல்லதாகும். நகை பெழுச்சியானது வானத்தில் கரிய முகிலிடையே திடுமெனத் தோன்றிப் பளிச்சிட்டு மறைந்து போகும் மின்னலை யொத்தது. மனமகிழ்ச்சி, உலகத்தில் எங்கும் நிறைந்துள்ள பகலவன் ஒளிபோல், உள்ளத்தின்கண் நிலையாக நிறைந்து நின்று உறுதியான, இடையீடற்ற அமைதியை அளிக்கின்றது. மிக்க உறுதியான போக்குடைய மாந்தர், 'நகை'யினை வெறுக்கத்தக்கதும் உறுதியற்றதுமாகக் கருதிக் கடிந்தொதுக்கி, உள்ளத்தில் 'மனமகிழ்ச்சி' நிலவச் செய்கிறார்கள்.

[சி. து. க.] Addison (The spectator)

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

குறித்த இல்லத்தில் தலைமகள் உறைகின்றாள். போற்றா ஒழுக்கத்தில் ஈடுபட்ட தலைமகன் விருந்தொடு தன் இல்லத்தை நோக்கி வருவதைத் தலைவி காண்கின்றாள். அவள் தன் காதலனொடு புலத்தலை விருந்து காரணமாக அடக்கிக்கொண்டு, தன் இல்லத்தின் பின்புறத்துள்ள வாழைத் தோட்டத்திற்கு விரைந்தோடி, தன் மெல்லிய விரல் சிவப்ப, ஒரு வாழையிலையை அரிந்து, அதனடி பருத்திருத்தலின் அதை வகிர்ந்து, பரிகலமமைத்து, அடிசிற் சாலையையடைந்து இன்னடிசிலாக்க முற்படுகிறாள்.

தலைமகனுடன் வந்த விருந்தை உபசரித்தற் கெழுந்த ஆர்வம் ஒரு புறந் தூண்ட, பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன் மீது புலவி மிகுத்தலான் உண்டாய சீற்றம் மறுபுறம் அலைப்ப, இன்னடிசில் ஆக்குகின்ற தலைமகளின் கண்கள் அடுப்பினின் றெழும் புகை படிந்து மூடின; பிறை போன்ற அவள் நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின. புகை படிந்த கண்களும், நுதலிற் றோன்றிய குறு வியர்வையும், தன்னழகைச் சிதையா வண்ணம், தலைவி தன் ஆடையின் முன்றானையால் அவற்றைத் துடைத்துக் கொள்ளுகிறாள். அடிசிற் சாலையில் இவ்வாறு மெய் வருந்த உணவு சமைக்கின்ற தலைமகளைத் தலைமகன், விருந்தொடு, மறைந்து நின்று காண்கின்றான். அவன் உள்ளம் உவகையால் துடிக்கின்றது. எம்முடன் விரும்பி வாருங்கள்! வாருங்கள்! என்று விருந்தினரை அழைக்கின்றான். காரணம், விருந்தினரைக் கண்ட தன் காதலியின் கண்கள் ஒரு பொழுதும் சிவப்பதில்லை; அன்றியும் புன்னகை பூத்த அவள் முகத்தைப் பின்னுமொரு முறை காணலாம் என்று அவன் கொண்ட ஆர்வமேயாகும்.

விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாயது இன்முகம் என்று,

"மோப்பக் குழையும் [illegible]
நோக்கக் குழையும் விருந்து"

என்ற குறட் பாவிற்குப் பொருள் கூறுமிடத்துப் பரிமேலழகர் கூறியது ஈண்டு உணரற்பாலது. தலைவனொடு புலந்த தலைவி விருந்தோம்பல் காரணமாகத் தன் ஊடலையும் அடக்கிக்கொண்டு இன்முகம் காட்டினள் என்றால், தமிழ் மங்கையர் விருந்தோம்பலிற் கொண்ட ஆர்வம் என்னே!

பரணர் பாடிய நற்றிணைச் செய்யுள் ஒன்றில் தோழியை நோக்கித் தலைமகள்,

* * *

"தண்டுறை யூரன் தண்டாப் பரத்தமை
புலவா யென்றி தோழி புலவேன்"

* * *

"என் நன்மனை நனிவிருந் தயருங்
கைதூ வின்மையின் எய்தா மாறே"

என்று கூறுவதை நாம் காண்கின்றோம். "தலைவனொடு புலத்தற்கு எனக்கு நேரமில்லை. ஏனெனின், என் மனையின்கண் வருகின்ற மிக்க விருந்தினரை உபசரித்தலிற் கையொழியாமையால் அவனை யெதிர்ப்படப் பெற்றிலேன்" என்பது பின்னிரண்டடிகளின் பொருளாகும்.

இக் குறிப்புக்களால், தமிழ் மகளிர் தங் கணவரொடு ஊடல், கூடல் களுக்கிடையேயும், விருந்தோம்பலை விரும்பி ஏற்றார்களெனத் தெரிகிறது.

விருந்தெனப் படுவது புதுமை. புதிதாய் வந்தவர்களை (விருந்தினரை) உபசரிப்பது தான் விருந்தோம்பல். "உண்டி நாலு விதத்தில் ஆறு சுவைத் திறத்தினில்" அளிப்பதும் விருந்து (Feast) ஆயிற்று.

இக் கட்டுரையை நான் எழுதிக் கொண்டிருக்கும் பொழுது என் கைக்கு வந்த 'முல்லைக் கொடி'யின் இதழில், 'ஈகையின் சிறப்பு' என்ற த[illegible]ன் கீழ் அறிஞர் சி. து. கனனிசாமி அவர்கள், தீட்டிய கட்டுரையில், "வறியார்க்கொன் றீவதே ஈகை" என்ற திருவள்ளுவர் கருத்தை அவர் வலியுறுத்தப் புகுந்து, விருந்தி வந்தோர் அரும்பசி களைவதன் சிறப்புடன் தம் கட்டுரையை முடித்தமை கண்டு நான் மகிழ்கின்றேன். அக் கட்டுரையும் விருந்தோம்பற் கருத்தைத் தன்னுட் கொண்டு மிளிர்கின்றது.

பருவ மழையின்மை முதலிய பற்பல காரணங்களால் இன்று தமிழ் நாட்டில் வளங்குன்றி, விருந்தோம்பல் நடை முறையில் இன்றைய நிலையிலும் இயலுமோ வென நாம் ஐயுறும் பொழுது, பண்டைத் தமிழரின் புலன் நெறி வழக்காம விருந்தோம்பலை யாவது நம் ஞாபகத்திலிருத்தி நம் பின்னவர்களுக்கு வழி காட்ட வேண்டாமா?

---

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

புண்ணுள்ள உடம்பை, துர்நாற்றம் எடுக்கும் உடம்பைப் புனுகு சந்தனம் முதலியவைகள் பூசி மறைக்க நினைப்பதைப் போல, ஐயா! கருத்தோடு கருத்து ஒன்றியிருந்தால் பெற்றோர் தடுப்பினும், நிந்திப்பினும் நிர்த் தாட்சண்யமாக, அவர்களைப் பிரிந்து சென்று இன்புற வாழ்வர் அன்பு உள்ளம் கொண்டோர் என்பதை நீர் அறிந்ததில்லையா? 'பெற்றோர் தடுத்தனர், அதனால் பல இன்னல்கள் நேர்ந்தன மக்களுக்கு' என்று பல புத்தகங்களில் நீர் படித்ததில்லையா? பலர் வாழ்க்கை யனுபவங்களிலிருந்து கேட்டதில்லையா?

அரசு! நீ பதட்டத்துடன் பேசுகின்றாய். நான் கூறுவதைச் சிறிது நேரம் பொறுமையுடன் கேட்டுப் பிறகு நான் கூறியது தவறா? அன்றி நீ நினைப்பது தவறா? என்பதை நீயே முடிவு கூறு. மேன் மாடிக்குப் போகலாம். என் வாழ்க்கையில் ஏற்பட்ட சிறு புயல்தான் இதற்குக் காரணம். பார்வதி! நீயும் வா.

[தொடரும்]

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)

1-NOV-1951 MADRAS

## இசைவகுப்பு விழா

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டச் சார்பில், 16-8-51 வியாழக்கிழமை மாலை 6-மணிக்குச் சென்னைத் தொண்டமண்டலம் பள்ளியில் மாதர்க்கு இசைவகுப்புத் தொடக்க விழா நடந்தது. இளவழகனார் தலைமை ஏற்றார். பண்டிதை மு. கிருஷ்ணவேணி அம்மையார்; வித்வான் B. சொக்கலிங்கனார், காஞ்சனமாலை அம்மையார் நல்லுரை வழங்கினர். உரைகள் முடிந்தபின் திருமுறை இசைவகுப்பு தொடங்கப் பெற்றது. மாதர் பலர் வந்திருந்தனர்.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாலை 6-மணிக்குத் திருமுறை இசை வகுப்பு, சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில் மாதர்க்கு நடைபெறும். திரு. காஞ்சனமாலை அம்மையார், பயிற்சி செய்விப்பார்கள். மாதர் பலராகத் திரண்டு கூடி அருளிசையிற் பழகி வர வேண்டுமென்று திருக்கூட்டத்தார் விரும்புகின்றனர்.

விழா நல்லுரைகளிற் சில வருமாறு:

**பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார்:**

“மங்கையர்க்கரசியார் சைவக் கொடி நாட்டினர்; கண்ணகி கற்புக் கொடி நாட்டினர்; மணிமேகலை ஈகைக் கொடி நாட்டினர்; காரைக்காலம்மையார் அன்புக் கொடி நாட்டினர். ஆண்டாள் பக்திக்கொடி நாட்டினர். காந்தருவதத்தை இசைக் கொடி நாட்டினர். நாமும் நமது திருமுறை இசை வகுப்பில் வெற்றிக் கொடி நாட்டுவோம்.

இறைவன் பாக்களே இனிமையுடையவை; அவற்றில் இசையும் சேர்ந்தால் எப்படியிருக்கும்! அதிலும், பேச்சே இசையாக உடைய பெண்கள் பயின்றால் சொல்ல வேண்டுமா?

பயிற்சி செய்விக்கும் அம்மையார், சொற்கள் சிதையாமல் அசையாமல் அன்புப் பெருக்குடன் செம்மையாகப் பாடவல்லவர். வாரந்தோறும் அவர்கள் கற்பிக்க முன் வந்திருப்பது நல்ல வாய்ப்பு; இதற்கு எத்தகைய நன்றி தெரிவிப்பது! நன்றாய்ப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தெய்வ அறஉணர்வால்தான் நம் நாடு சென்ற சில ஆண்டுகளாக ஏற்பட்ட தொல்லைகளிலிருந்து தப்பியது. நாம் அலைந்தோம்; கவலைப்பட்டோம்; நாட்டுக்கு ஒரு கேடும் இல்லை.

**வித்வான் பா. சொக்கலிங்கனார்:**

நாட்டில் போலி மலிந்தமையால் தான் தாழ்வெல்லாம்; உலகாயசம் மலிந்துவிட்டது. போலிக்குக் காரணம், பரப்புவோர் குறைபாடு. அக்காலத்திலும் போலியர் இருந்தனர்; “நாத்திகம் பேசி நாத்தழும்பேறினர்” என்றார் மணிவாசகர்.

உண்மையை அறிந்தவர்களே இறைவனைப் பற்றிப் பேசத் தகுதியுடையவர்கள். மற்றவர்கள் பேசுவது பிழைப்பு, ஏமாற்றம்.

நம் பொற்றாமரைக் குளம் எப்படி இருக்கிறது? உள்ளத்தைப் போன்று பாசம் பிடித்திருக்கிறது. கிறித்தவர் மகமதியர் கோயில்கள் எவ்வாறு இருக்கின்றன!

திருமுறைச் சிறப்புகள் அற்புதம்; அல்லாவுதீன் விளக்கு நினைவுக்கு வருகின்றது.

ஞானசம்பந்தர் பால் உண்டதும் பாடல்! திருநாவுக்கரசர் சமணராயிருந்தது மாறி வயிற்று வலி தீர்ந்ததும் பாடல்! சுந்தரர் தடுத்தாட்கொள்ளப் பெற்றதும் பாடல்! எல்லாம் அற்புதம்!

பெண்கள்தான், புரட்சிகள் செய்ய வேண்டும்; மங்கையர்க்கரசியார் நாட்டையே மாற்றினார். திலகவதியார் நாவுக்கரசரை மாற்றினார். நாடு வளம் பெற வேண்டும். அதனால் நாமும் முன்னேற்றம் பெறவேண்டும்.

**திரு. காஞ்சனமாலை அம்மையார்:**

வரும் ஆண்டு, திருக்கழுக்குன்ற வழிபாட்டை முடித்துக் கொண்டு இருநூறு பேருக்குக் குறையாமல் திருவருளிசைக் களத்துக்குப் போக நேர்ந்தால் நல்லது. வகுப்பில் பயிலும் அன்பர்கள் எல்லாரும் பேரின்ப இசை வெள்ளம் பெருக்கவேண்டும்.

திருக்கழுக்குன்றத்துத் திருமுறை விழாவுக்கு ஆசிரியர் யானைகள் கேட்டார்கள். சேரநாட்டில் யானைகள் மிகுதி. கட்டையிழுக்கும் யானைகட்குத் திருமுறை தாங்குவது இன்பந்தான். மன்னர்கள் அன்பர்களானால் விழாவுக்கு என்ன குறை?

திருமுறை இசை வகுப்பு இன்று தொடக்கமாகின்றது. என்றும் நிலைத்த அறிகுறியாய் இது விளங்க வேண்டும். ஆசிரியர் தலைமையில் இது ஆரம்பிக்கப் பெற்றது. இந்நிகழ்ச்சி ‘சிலாசாசனம்’ பெற வேண்டும். அப் பட்டையத்தைச் சென்னைக் கோயிலிலோ, மாம்பாக்கம் குருகுலத்திலோ வைக்க வேண்டும். வாழி திருமுறை இசை!


# கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி!

# —N. K. M.—

# தங்க நாடா

(பதிவு)

எண் 20 முதல் 100 வரையில்
வேட்டி, சேலை, துண்டு, போர்வை,
மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.

**நூலாடைகட்கும்**
**பட்டாடைகட்கும்**

நம்பிக்கையான இடம்:

**கருப்பண முதலியார்**
**ஸ்டோர்ஸ்,**

துணி வாணிபம்,

53, கிடங்குத் தெரு, சென்னை 1.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.


| கிளை | கர, ஆவணி, | தளிர் |
|---|---|---|
| 3 | 24-8-51 வெள்ளி | 45 |


# பொறுப்பு வேண்டும்

ஒழுங்கு முறையான ஓர் வாழ்க்கைப் பாதை ஒவ்வொருவர்க்கும் வேண்டும்.

இதற்கு நல்லவர் சேர்க்கை, முற்போக்கு ஆர்வம், உயர்ந்த உள்ளம், சிக்கலில்லாத் தெளிவு, தளராத உறுதி முதலிய சிறப்புகள் இன்றியமையாதன.

அறிவுரை சொல்ல விரும்புவோர், எழுத்தாளர், பேச்சாளர், கிராமங்களின் நாட்டாண்மைக்காரர், படிப்புடையோர், கழகங்களை நடத்துவோர், அவற்றோடு இணங்கு நிற்போர், நல்ல குடும்பங்களில் தோன்றிப் பரம்பரைச் சிறப்புடன் வாழ்வோர், சிறப்பாகப் பள்ளியாசிரியர், பொதுவாக ஏனை அலுவலர், மாதர் முதலியோர்க்கு இந்த இயல்புகள் இன்னும் முதன்மையாகும்.

'நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை' என்னும் பொதுநலக் கருத்தில் ஆழ்ந்த தெளிவு பெற்றிருக்க வேண்டும். பிறர்க்கென வாழ்தலே வாழ்க்கை நோக்கம், தனக்கென வாழ்தல் அதில் தானே அமைகின்றது என்னும் உணர்வும் அதற்கேற்ற நடை முறையும் ஓங்கி நிற்க வேண்டும்.

இத்தகைய நிலைகள் அமைந்தவர், பொறுப்புணர்ந்து நடப்பர். மண்ணில் பிறந்துவிட்ட ஒவ்வொருவர்க்கும் சிறந்த பொறுப்புகள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றுதலே கடமை செய்தலாகும். அறஞ் செய்தல் என்பது, இவை செய்தலே.

பொறுப்புணர்ந்து நடந்து கொள்ளாதவர் பிறவி, வீணே; கடமை வழுவி, நன்றி மறந்து, கழுவாயில்லாத பெருங் குறைக்கு ஆளாகி இறப்பதற்கே தொழிலாகி நாட்டின் களை என இகழப்படத்தக்க நிலையில் அவர் நிற்பர்.

பிறந்தவர் ஒவ்வொருவரும் ஒரு மொழி அறிந்து ஒரு கலை தெரிந்து ஒரு தொழில் பழகி ஒரு பணி செய்து ஓர் அருளில் பொருந்தி வாழக் கடமைப்பட்டிருக்கின்றனர். இவ்வுண்மையைத் தெளிவாக அறிந்தவர், பிறரும் தாமும் இவ்வாறு நாகரிக நல்வாழ்க்கையில் வாழ முயலுதலும் முற்படுதலும் முறையாகும்.

இவ்வுணர்ச்சி நாட்டில் பரவுதற்குப் பொறுப்புணர்ச்சி மிக்க பணியார்வமுடையார் சூழ்நிலை நாட்டுக்கு வேண்டும்.

பணியார்வம் இல்லாதவரால் யாருக்குத்தான் என்ன பயன்? ஆராய்ந்து நோக்குங்கால், அவர்க்கே அவரால் பயன் இல்லை என்பது துணியப்படும். காரணம், பிறர்க்குப் பயனுறுதல் இல்லாதபோது, தம் நலங்களும் குன்றிப் போதல் காணலாம். உந்து வண்டியில் ஓர் இடத்திற்குப் பலரை அழைத்துச் செல்பவர் தாமும் அந்த இடத்துக்குப் போகும் நலத்தைப் பெறுதல் இயல்புதானே! இன்றேல் இல்லை. பணிப் பொறுப்புடையவர்தாம் உலகைச் சுமந்து நிற்கும் வீரர்!

பல காலம் கல்லூரிகளிற் பயின்றும், நகரங்களில் நாகரிக வாழ்வு வாழ்கிறோம் என்னும் மன நிலையில் இருந்தும், கீழ்த்தர மக்களிலிருந்து நடுத்தர உயர்தர மக்களாய் உயர்ந்திருக்கிறோம் என்னும் மகிழ்வு நிலையில் இருந்தும் இப் பணி வீரம் இல்லையெனின், அவ்வளவும் போலி வாழ்வாகத்தானே புரையோடிப் போகின்றன.

பணியை அவர் சூழ்நிலைக்கும் தகுதிக்கும் தக்கபடியே மேற்கொள்ள முடியும் என்பது எல்லாரும் அறிந்ததுதான்! ஆனால்,ஏதேனும் ஒரு பணியைத் தம் வாழ்க்கையில் எடுத்து ஒரே நோக்கமாய் உருவாகச் செய்துவருதல் என்பது யார்க்கும் மறுக்கப்படாத தொன்று. அதன் பொருட்டுச், செயற்குரிய நன் முயற்சிகளே யல்லாமல், செயற்கரிய நன் முயற்சிகளையும் உள்ளம் உரை உடல் முதலியவற்றால் மேற்கொண்டு உழைத்துவருங் கடமை அனைவர்க்கும் உண்டு என்பதும் மறுக்கப்படாத தொன்று.

முயற்சி வீரர் முன்வருக! குருகுலம், இத்தகைய பணி வீரரை, பணி மொழியாளரை, பணிக் கலைஞரை, பணித் தொழிலாளரை, பணித் தொண்டரை, பணி அருளாளரை ஒருங்கு திரட்டுகின்றது. குருகுல இயக்கம் நாட்டின் பணிநிலை இயக்கம்; உயிர்நிலை இயக்கம்.

இந் நிலையில் நாட்டில் பலர் திகழ்ந்தால், நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை.

# பெரிய புராணம்

(27-4-51-ன் தொடர்ச்சி)

இப்பால், கன்றை இழந்த ஆன், துயர் தாங்கல் ஆற்றாது. தீயெழப் பெருமூச்சு விட்டு விம்மிக் கண்ணீர் ஒழுக, எல்லா உயிர்களையுங் காக்குஞ் செங்கோற் காவலனான மனுவின் அரண்மனை வாயிலை யடைந்து, அங்குக் கட்டியிருந்த இடுக்கண் மணியைத் தன் கொம்பினால் முட்டி யசைத்து ஒலி யெழுப்பி முறையிட்டது.

மணியோசை, மன்னன் செவியிற் கேட்டது; பழிகளைப் பறைசாற்றும் முழக்கமோ, தீவினைகள் செய்யும் ஒலிதானோ, அல்லது மைந்தன் ஆவி கொள்ள வரும் கூற்றுவனது ஊர்தியின் கழுத்துமணி ஓசையோ என்னும்படி அது இருந்தது.

கேட்ட மன்னன், அரியணையிலிருந்து இறங்கி வாயிலுக்கு வந்தான். காவலர் எதிர் வந்து போற்றி, பசு, மணியசைத்தது என்று கூறினர்.

வருத்தத்தோடு நின்று துடித்துக் கொண்டிருந்த பசுவை அரசன் நோக்கினான். இதற்கு என்ன நேர்ந்தது என்று அமைச்சரை இகழ்ந்து பார்க்க, செய்தி தெரிந்தவன் ஒருவன் ஆன் கன்றுக்கு நேர்ந்ததைத் தெரிவித்தான்.

அறிந்த அரசன் அளவிறந்த துயரம் எய்தினான். பசுவைப் போலவே, நஞ்சு தலைக்கேறினாற் போல் வேதனை கொண்டான். எவ் வினை இங்ஙனம் விளைந்ததோ என்று இடருற்று இரங்கி ஏங்கினான். வையம் காக்கும் என் செங்கோலும் அறமும் நன்று என்று கலங்கினான். என்ன செய்தால் ஆவின் துயரம் தீரும் என்று அதன் முகம் நோக்கிச் சோர்ந்தான்.

அமைச்சர்கள் அந் நிலை கண்டு, அவன் அடி வணங்கி, 'சிந்தை தளர்வதிற் பயனில்லை; ஆன் வதை செய்தார்க்கு அறநூல் விதித்தபடி கழுவாய் தேடுதல் முறை' என்று ஆறுதலும் நடைமுறையும் தெரிவித்தனர்.

அரசன் உணர்ச்சி, அமைச்சர் உணர்ச்சியினும் மேம்பட்டதாயிருந்தது.

'வழக்கென்று நீங்கள் கூறிய கழுவாய் முறை ஆவின் துயரத்தைத் தீர்க்குமா? மைந்தனை யான் இழக்க நேரும் என்ற அச்சத்தால் இவ்வாறு நீங்கள் கூறுகிறீர்கள். அதற்கு நான் உடன்பட்டால் அறம் தளரும்.

'உயிர்களைக் காக்கக் கடமைப்பட்ட அரசன் அவற்றிற்குத் தன்னாலும் தன் அதிகாரிகளாலும், பகைவராலும், கள்வராலும், ஏனை உயிர்களாலும் இடையூறும் அச்சமும் உண்டாகாமல் காக்க வேண்டும்.

'என் மகன் செய்த கொலைக்கு நான் கழுவாய் தேடிக்கொண்டு, வேறொருவன் செய்த கொலைக்கு அவன் உயிரைக்கொல்வேனானால், மனுநூல் முறையை மனுமன்னன் அழித்தான் என்னும் பழியன்றோ எனக்கு நிலைக்கும்' என்று அரசன் உணர்ச்சி மிகுந்து இகழ்ந்து கூறினான்.

எதிர் நின்ற மதியமைச்சர், 'ஆன் வதைக்குக் கழுவாய் தேடுதல் தொன்று தொட்டு நடந்துவரும் அற முறைமையே' என்றனர்.

அரசன், முகம் புலர்ந்து சினங் கொண்டான். அவன் முகம், தீயில் தோய்ந்த செந்தாமரையிதழ் போல் தோன்றிற்று.

'என்ன பழுதுரைத்தீர்! நூல் உரையைவிட அற நெறியின் உண்மைத் திறம் பெரிது! எவ்வுலகில் எந்தப் பசு இம் முறையில் மணி ஒலித்து முறையிட்டது?

'இறைவன் உறையும் திருவாரூரிற் பிறந்தவர் அனைவரும் மேம்பட்டவர்கள். அப் பிறப்புடைய ஆன் கன்றைக் கொன்றது இன்னும் பெருந் தவறு. அதற்கு, மைந்தன் உயிரைப் போக்கி, யானும் ஆன் படுந் துயரை அடைதலே முறைமை' என்று துணிந்துரைத்தான். அமைச்சர், அஞ்சி விலகினர்.

அரசன், தன் மகனை அங்கு அழைத்து, அமைச்சருள் ஒருவனை நோக்கி, 'இவனை வீதியில் தேர்க் காலில் இட்டு ஊர்க' என்று பணித்தான். கேட்டுத் திடுக்கிட்டு அவ்வமைச்சன் அங்கிருந்து நீங்கித் தன் உயிர் துறந்தான்.

பின்பு, அரசன், தானே அக்காரியத்தைச் செய்யத் துணிந்து, தன் குலத்துக்கு ஒரு மைந்தனே உள்ளான் என்பது கருதாமல், அறத்தின் வழி நடப்பதே முறை என்று கருதி, மைந்தனை வீதியிற் கிடக்கவைத்து அவன் மார்பில் தேரை ஏற்றி ஊர்ந்தான். ஆட்சி புரிதல் என்பது எளிய செயலன்று; மிகவும் அரியதொன்று.

வேந்தன் செயல் கண்டு மக்கள் கண்ணீர் பெருக்கினர். தேவர் வியந்து மலர் மாரி சொரிந்தனர். தெய்வம், வீதியில் விடையின்மேல் அரசன் கண்ணெதிர் தோன்றியது.

சடைமருங்கில் இளம் பிறையும், திருநுதலில் தனி விழியும், இடப் பக்கம உமையாளும், எம் மருங்கும் பூதக் கூட்டமும், தன் அருகில் நெருங்கும் இறைவனது அருட் பெருமையும் அரசன் கண்டு உள்ளம் உருகிப் போற்றுதலும், பெருமான் அவனுக்குத் தண்ணருள் வழங்கினான்.

உடனே உயிர் பிரிந்த ஆன் கன்றும், அரசன் மைந்தனும், அமைச்சனும் உயிர்பெற்றெழுந்தனர். வேந்தன் தன்னை மறந்து நெஞ்சுருகினான். முன்னவனே முன்னின்றால் முடியாதது என்ன இருக்கின்றது?

எழுந்து அடிபணிந்த திருமகனை வேந்தன் தழுவிக்கொண்டு துயர் நீங்கினான். துள்ளி ஓடிவரும் கன்றுக்கும் ஆன் தன் மடி சுரந்து பால் தந்து துன்பம் நீங்கியது.

இங்ஙனம் அறநெறியில் ஒழுகுவார் எண்ணிறந்தவர்க்கு அருள் கொடுத்துக் கொண்டு இறைவன் உறையும் திருநகர் திருவாரூர்! அத் திருநகரச் சிறப்பை எடுத்தோதுதல் நம் அளவில் அடங்குவதன்று. திருவாரூரில் அதன் அகமலராய்ப் பொலியும் பூங்கோயிலில் அறவடிவனாகிய இறைவன் நாளும் திகழ்கின்றனன்.

# பிராணயாமம்

(உரு. தெய்வ அறுமுகனர்.)

(1) அதி காலையி லருணோதயத்திற்கு முன் (25 நாழிகைக்கு மேல்) அதாவது 3½ மணி முதல் 6 மணிக்குள் சரம் (கலை) பழகுதல் (காற்றை முறைப்படி நடத்தல்), உடல் நலமும் நோயற்ற வாழ்வும் ஆயுள் வளர்ச்சியும் (கால உயர்வு) எண்ணிய கருமத்தின் நன்மை தீமையும் அறிய வழியாகின்றது. மற்றும் மக்களுக்கு வகுத்த தினசரி உசுவாசம் (வாயு நடை) 21600. இதில் 7200 அங்குல வாயு கழிகின்றது. மிகுதி 14400 உள்ளேகு மென்க. இதனை முறைப்படி பழகி (சாதகம்) நடத்தினல் ஆயுள் 120 என்பர். வாயு அதிகக் கழிவிற்கிட மேற்படின் வாழ்நாள் குறையும், வாயுவை நிறுத்திப் பழகினல் வயது வளரும்.

ஏறுதல் பூரகம் ஈரெட்டு
வாமத்தால்
ஆறுதல் கும்பம் அறுபத்து
நாலதில்
ஊறுதல் முப்பத் திரண்டதி
ரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக
மாமே.

என்றபடி இதனை முறையாகப் பழகினல் எல்லா நன்மையு முண்டாகும்.

அக்காரத்தோடு பழகல் வாயுவை உள்ளுக்கிழுத்து மூலாதார முதல் அறுவகைப் பிணைப்புகளில் வரிசையாக எல்லா இடங்களிலும் நிரப்பி அவ்விடத்திலுள்ள கெட்ட வாயுவை (தங்கும் வாயுவை) வெளியே விடுதல். (இதைக் கரியமில வாயு வென்பர்) வாயுவை இழுத்துக் கும்பித்து (நிறுத்தி) விடுகின்றபோது நெருப்பும் வாயுவும் கலந்து எல்லா வுறுப்புகளிலும் சென்று சுத்தி செய்கின்றது. பிறகு வாயுவை உள்ளிழுக்கும் போது பரிசுத்தமான காற்றை (அமிர்தம்) இழுக்கின்றோமாதலான் உடலிற்கு நோயின்மையும், பலமும், திட ஆரோக்கியமும், ஆயுள் விருத்தியு மேற்படுகின்றது.

இதுவும், பழகும்போது சுத்தமான இடத்தில் சாணத்தால் மெழுகி (நல் மணம், இயற்கைக் காற்று வீசும் இடத்தில்) உடல் நேரே நிற்க தலையும் உடலும் அசையாமல் நேரே இருக்க உட்கார்ந்து காற்றை உள்ளிழுக்கும் போது (பூரகம்) பரவெளியிலுள்ள பரிசுத்த வாயுவை உள்ளிழுப்பதாக எண்ணிக்கொண்டே இழுக்கவும்; நிறுத்தும் போது (கும்பகம்) உள்ளிருக்கும் நெருப்பின் சக்தியினல் கெட்ட காற்று வெளியே தள்ளுவதாக எண்ணவும்; வெளியே கழிவது கெட்ட காற்று (ரேசகம்) எனவும் கருதவேண்டும்.

கூடுமானல் ஆசனம் (பீடம்) மான் தோல், புலித்தோல், கம்பளம், வெள்ளை வஸ்திரம் முதலிய ஏதேனும் தன்னலியன்ற இருக்கையை அமைத்துக் கொள்ளல் சிறப்பாம்.

கலை பழகும் மக்கள் அதிக நித்திரை விரும்பாமை, மக்களிடை அதிகக் கூட்டத்தில் சேராமை, அறச்செயல், குடியும் பொய்யும் இல்லாமை, பொறுமை, நன்னடக்கை, ஆசிரிய பக்தி, பெரியாரைப் பேணல் இவைகளைக் கடைப் பிடித்தல் நியமமாம்.

கூடம் எடுத்துக் குடிபுக்க
மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண்
டங்குலம்
நீடுவர் எண்விரல் கண்டிப்பர்
நால்விரல்
கூடிக் கொளிற்கோல அஞ்செழுத்
தாமே.

என்றபடி எவ்விதத்திலும் பிராண வாயுவை 4 அங்குலத்திற்கு மேல் கழிய விடாது குறைத்துக் கொள்ளுமாறு வாயுவை நிறுத்திப் பழக முயற்சிக்கவும்.

கழிகின்ற காற்றை அடக்க அதிகம் பேசாமை, பெருநடை கொள்ளாமை, மிகு உணடி உண்ணுமை, வெகு சீற்றம் கொள்ளாமை, அவா வெகுளியில்லாமை, ஓடுகின்ற வாயுவை மூக்கின் முனை நின்று அதிகமாய் வெளியே போகாமற் காத்தல் ஆய இன்னோன்ன நல் வழிகளை அனுட்டித்து நடத்தல் வேண்டும். அதி காலையில் துயிலெழல், இயற்கை இன்பம் அனுபவித்தல், எப்போதும் ஆனந்தமாயிருக்கப் பழகல், சரம் (கலை), வாயுவை யடக்கல் (பிராணயாமம்) இவைகள் உடலிற்கு நோயின்றி இன்ப வாழ்வாகும்.

சரம் முதலிய பழக விரும்புவோர் 'மெய்ந் நெறிப் போதன கழகத்தில்'' சேர்ந்து பழகலாம். அன்பினல் "யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக'' என்ற ஆன்றோர் வாக்கின்படி எழுதியது.


நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, :: சென்னை-1.

[2-ம் பக்கம் தொடர்ச்சி]

திகழ்வது. நாடெங்கும் பரவி உயிரிரக்கத்தின் மூதன்மையைத் தெள்ளிதின் விளக்க வல்லது. உலகிற் பெரும் பகுதியிற் பரவியுள்ள பல சமயங்கள் இவ்வகையிற் றாழ்ந்ததென்பது நம் கருத்தன்று. பொதுவான கருத்துகளில் ஒன்றாகத் திகழ்ந்தாலும் உயிரிரக்கத்தின் முதன்மையை வற்புறுத்துவதில் அச்சமயங்களை விட நம் சைவ சமயம் நீண்ட காலமாகப் பணி புரிந்து வருகின்றது என்பதே கருத்தாகும்.

இவ்வரிய வழியெல்லாம் தமக்கு வாய்த்திருந்தும் நம் நாட்டவர் தம் தீநெறிகளை விடாமற் றழுவிச் செல்வது காணுங்கால் நம் உள்ளம் வருந்துகின்றது. எவ்வளவோ அரிய முயற்சிகள் செய்தும் நாட்டில் தெய்வங்களுக்கு உயிர்ப்பலி யிடும் கொடிய பழக்கம் முற்றும் நின்றபாடில்லை.

இந்த ஆடி மாதத்தில் அங்கங்கும் சிற்றூர்களில் நடைபெற்ற சிறு தேவதை விழாக்களில் ஆயிரக் கணக்கில் உயிர்ப்பலிகள் இடப்பெற்றன என்பதையறிந்து நெஞ்சம் சொல்லொணா வேதனையடைகிறது. தெய்வத்தின் முன் உயிர்ப்பலி யிடுதல் சட்ட விரோதம் என்று தெரிந்திருந்தும் மக்கள், இவ்வாறு தீய, அருவருக்கத் தக்க, கொடிய வழக்கத்தினைக் கைவிடா தொழுகுவராயின், இவர்களைக் காட்டினும், ஆப்பிரிக்க மக்களே ஆயிர மடங்கு மேலானவரல்லவா! அந்தோ! இவ்வறியாமை நீங்குவ தென்நாளோ!

"நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றி குக்குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டு போகவுங் கண்டே
புந்திநொந்து உளம்நடுக் குற்றேன்"

—வள்ளலார்.

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

அவாவற்ற உள்ளமே அந்நிலைக்குக் காரணம் என்று அறிந்து,

'மாவரைக்கும் தொழிலோய்! யான் மணிமகுடம் புனைந்து
மாநிலத்தைப் புரந்திடினும் மதிப்பிடினென் செல்வம்
யாவுநின துளமகிழ்வி லாயிரத்தி லொருகூ
றாகுமதற் கீடாமோ? அமைதியுமெற் குண்டோ?
மணிமகுடம் பாகையதன் மதிப்புறுமோ? என்றன்
மண்ணாட்சி தொழிற்சாலை மாண்பதனுக் கீடோ?
திணிநலத்தி னின்போல்வார் செழித்துயரின் நாடு
செருக்குற்றுத் திகழ்ந்திடுதல் திண்ணமெனத் தெரிக.

என்று கூறி மகிழ்ந்ததாகக் கூறுவர்.*

அவாவைச் சுருக்கிக் கொண்டு தாம் பெற்றது கொண்டு பெருமகிழ்ச்சியடைதல், செல்வ முற்றார் ஒவ்வொருவருக்கும் வேண்டியதாகும். அவா, சுருங்கச் சுருங்க உள்ளத்தில் அமைதி பெரிதாகத் தழைக்கிறது. அமைதியான உள்ளம் பெற்றதும், தாம் பெற்ற செல்வத்தில் ஒரு பகுதியை நல்லறச் செயல்களுக்குப் பயன்படுத்தல் கூடும். அமைதி பெறாதார், மிகப் பெரிய செல்வராயினும், மிக எளியரைக் காட்டினும் கீழான நிலையில் இருப்பவரே யாவர்.

சாக்கரடீஸ் 'போதுமென்ற உள்ளமே இயல்பான செல்வம்' (Content is natural wealth) என்று கூறி யிருக்கிறார். ஆகவே செல்வமென்பது சிந்தையின் நிறைவே என்னும் பெரியோர் வாய்மொழியின் சிறந்த கருத்தினை உள்ளபடி உணர்ந்து மகிழ்க.

*The Miller of the Dee' என்னும் பாடலைத் தழுவியது.

## முருகவேள் திருமுறைகள்

முதல் பகுதி வெளிவந்தபின், மேலும் பெயர்ப் பதிவுகள் சேர்ந்து வருகின்றன. குறித்த அளவு சேர்ந்தபின், வெளியீடுகள் தொடர்ந்து வெளிவரும்.

இத் திருமுறைகள் பகுதி பகுதியாக வெளிவருதலை விட, தொகுதி தொகுதியாக அட்டைக் கட்டுச் செய்து வெளிவருதல் கையாளுதற்குத் தகுதியாயிருக்கும் என்றும், அஞ்சலில் வருவிப்பதற்கும் செலவு குறையும் என்றும் சிலர் கருத்து அறிவிக்கின்றனர். அவ்வாறே செய்ய வெளியிடுவோர் இசைந்துள்ளனர்.

நான்கு பகுதிகள் சேர்ந்த தொகுதி ஒன்று (400 பக்கங்கள்) ரூபா 5-0-0 விலையாகும். வாங்குவோர்க்குக் கட்டுச் செய்யும் தனிச் செலவு அப்போது இல்லை. நான்கு திங்களில் நடைபெறும் பணி, இரண்டு திங்களில் நிறைவேறும். பல வெளியீடுகள் இங்ஙனம் தொடர்ந்து விரைவில் வெளிவருதற்கும் வாய்ப்பாயிருக்கும்.

ஆதலால், முருகவேள் திருமுறை அன்பர்கள், தொகுதியாகவே இனிப்பெற்றுக்கொள்ளலாம். விரும்பும் அன்பர்கள் அதற்குரிய விலை ரூபா ஐந்தை முன்னால் அனுப்பி ஒவ்வொரு தொகுதியையும் பெற்றுக் கொள்வார்களாக!

வாங்குவோர் எண்ணிக்கை போதியது அமைந்தால் ஆவணித் திங்களிலேயே முதல் தொகுதியை வெளியிடலாகும்.

குறிப்பு:-முதல் பகுதியை வாங்கிக் கொண்டவர்கள், முதல் தொகுதியில் அடங்கும் ஏனை மூன்று பகுதிகளையும் தனித்தனியே பெற விரும்பினாலும் அவர்களுக்கு அவ்வாறே அனுப்பி வைக்கப்பெறும்.

—குருகுலத்தார்.

27 AUG 1951

# செல்வமென்பது

(சி. து. க.)

மக்கள் வாழ்க்கைக்கு மிக முதன்மையானது 'செல்வம்' என்பதில் ஐயமில்லை. 'உயர்ந்தோர்' 'தாழ்ந்தோர்' என்னும் சொற்களின் பொருள்கள் அறிஞர்களால் வேறு வகையாக மதிக்கப் பெறினும் செல்வரை உயர்ந்தோராகவும் வறியரைத் தாழ்ந்தோராகவும் கருதுவதே இந் நாட்களில் பொதுவழக்காக விளங்குவதைக் காண்கின்றோம். கல்வியறிவு அறவே பெறாதொழியினும், செல்வம் படைத்தவனுக்கு இவ் வுலகில் எச் செயலும் எளிதில் முடிகிறது. பொருள் இல்லாதவனை, வாழ்க்கைத் துணையாகச் சிறப்பித்துக் கூறும் மனைவியோ, அல்லது பாலூட்டிச் சீராட்டிய தாயோ அவ்வளவாக விரும்பி அவன் கருத்துக்கு இசைவாக நடப்பதில்லை. அவன் வாய்ச் சொற்கள் 'ஏழைவாய்ச் சொற்கள்' என்ற நிலையில் யாராலும் வெறுத்தொதுக்கப் படுகின்றன. இவ் வுலகில் உயிருடன் நடமாடப் பெறினும் ஏழைகட்கு இவ் வுலக இன்பங்களில் எதும் பங்கு கிடையாது. 'பொருளிலார்க் கிவ்வுலக மில்லை' என்னும் நம் புலவர் பெருமான் திருவாக்கும் இதனை மெய்ப்படுத்துகின்றது.

செல்வம் படைத்தோர் நிலைமை பார்வைக்குப் பகட்டாகவும் ஆரவாரமாகவும் காணப்படுகின்றது. அவருடைய கடைக்கண் பார்வைக்குக் காத்து நிற்பார் பலர். அவர் முகத்திற் புலப்படும் மகிழ்ச்சிக் குறிப்புக்காக ஏங்கிக் கிடப்பார் சிலர். அவர் முகத்திற் பிறக்கும் சிறிய சினக் குறிப்பைக் கண்டு உள்ளமே குழம்பி மெலிவடைவார் மற்றும் பலர். ஒரு சிறிதும் பொருள் தராத, உறுதியற்ற வெறு மொழிகளாயினும் அச் செல்வர் கூற்றுக்களுக்குச் செவி சாய்த்துக் காத்து நிற்பதே தம் பெறலரும் பேறாகக் கருதுவோரும் உண்டு.

பிறர் தம்மை உயர்வாகக் கருதுவது ஒரு புறம் இருக்கட்டும். செல்வம் படைத்தோர் யாவரும், உண்மையிலேயே மகிழ்ச்சி அமைந்த இன்ப வாழ்வு நடத்துகிறார்களா என்று கவனித்தால், இல்லை என்று தான் நம் கருத்துக்குப் புலப்படுகின்றது.

கோழி கூவுமுன் உறக்கம் நீங்கி எழுந்து உள்ளக் கிளர்ச்சியோடு வயலுக்குச் செல்கிறான் உழவன். பகலெல்லாம், வெயிலென்றும் மழையென்றும் பாராது, நெற்றி வேர்வை நிலத்திற் சிந்துமாறு பாடு படுகிறான். தன் உழைப்பின் மாட்சி பொன்னிறக் கதிர் முற்றிய செந்நெல் வயல்களாகக் காட்சி தருதலைக் கண்டு அவன் நெஞ்சம் பூரிப்படைகின்றது. வேலை முடிந்தபின், மாலையில் மகிழ்ச்சியோடு வீடு திரும்புகிறான். தன் வருகைக்குக் காத்துநிற்கும் வாழ்க்கைத் துணைவி, இன்பச் செழு மக்கள் இவர்களைப் பற்றிய நினைவுத் தென்றல் தவழும் நெஞ்சோடு வீட்டுக்கு வருகிறான். எல்லாரும் ஒன்று கூடி மகிழ்கின்றனர். உழைப்பிற் பெற்ற உறு பொருள்கள் கொண்டு சமைத்த இன்னடிசிலை மனையாள் அன்புடன் படைக்கிறாள். மக்கள் தன்னைப் புடைசூழ்ந் துண்ணத் தானும் உண்கின்றான் தலைவன். இல்லாள் அன்புடன் தானே சமைத்த உணவாதலால் அவ் வுணவுவகைகளுள் எதனைச் சுவைத்தாலும் அது 'வானோரமிழ்தம்' போன்று அவனுக்குச் சுவை தருகின்றது. உழைப்பின் முடிவில் உலவா இன்பம்! அவர்கள் வாழ்வது சிறு குடிசையே ஆனாலும், அது மகிழ்ச்சிக்குரிய துறக்கமாக அவர்களுக்குத் தெரிகிறது. உழைப்பின் பயனான விளைவுச் செல்வமும் போதுமென்று அமைந்த உள்ளமும் அவர்கள் வாழ்க்கை யின்பம் ஒரு படித்தாக நிலைத்திருக்க உதவுகிறது.

இத்தகைய மகிழ்ச்சி ஏன் செல்வரிற் பெரும்பாலார்க்கு இருப்பதில்லை? காரணம், உள்ளதைக் கொண்டு அமையாமல் அவர்தம் உள்ளத்தில் மேலுமேலும் பெருகும் அவா வென்பதில் ஐயமில்லை. ஏழை உழவனுக்கு இயல்பில் அமைந்திருக்கும் 'உள்ள அமைதி' அச் செல்வருக்கு இருப்பதில்லை.

நம்மில் சிலருக்கு முன் செய்த நல்வினைப் பயனால் போதுமளவு செல்வம் அமைந்திருக்கின்றது. அச் செல்வம், வாணிக முதலிய பலவேறு முயற்சிகளால் அவர்க்குக் கிடைத்திருக்கலாம். குறிப்பிட்ட ஓரளவுக்குச் செல்வம் கிடைத்துத் தம் வாழ்க்கை செழுமையான நிலையடைந்ததும், அச் செல்வத்தில் ஒரு பகுதியைக் கொண்டு தம் பெயர் புகழோடு வாழும்படி நல்லறச் செயல்கள் புரிதலின்றி மேலுமேலும் பொருளீட்டுதலிலேயே தம வாழ்க்கை முழுதும் வெறுவிதாகக் கழிக்கின்றனர். பொருளீட்டும் வழி எத்தகையதாயினும் எத்துணைத்தாயினும் அவர்கள் உள்ளம் சலிப்பதில்லை. புகழ்ச்சி இகழ்ச்சி இவற்றின் வேறுபாடு காண்பதற்கும் அவர்கட்குப் போதுமான ஓய்வு கிடைப்பதில்லை. கால முற்றும் பேயாய்த் திரிந்தலைந்து தொகுக்கும் பொருள்களால் ஒரு சிறிதாயினும் இவர்கள் இன்பம் அடைவதில்லை. காரணம், 'போதுமென்ற மனம்' இன்மையே யாகும்.

இங்கிலாந்து நாடாண்ட முடிவேந்தன் ஒருவன் செல்வச் செழுமை மிகுந்தவனாக விளங்கினான். இவன் மிக்க ஆடம்பரப்பிரியன். ஆரவார நீர்மையன். எல்லா வகையான சிறப்புக்களும் அவனுக்கு அமைந்திருந்தாலும் உள்ளத்தில் 'அமைதி' ஒன்று மட்டும் வாய்க்கவில்லை. ஒரு நாள் ஆற்றோரமாக உலவச் சென்ற மன்னன், அங்கொரு மாவரைக்கும் தொழிலாளியைக் காண நேர்ந்தது. கவலையற்ற வானம்பாடி போல இசைத்துக் கொண்டே மகிழ்ச்சியோடு அத் தொழிலாளி வேலை செய்துகொண்டிருத்தலைக் கண்டு, புரவலன் உள்ளம் புழுங்கியது. தன் பரந்த நாடாட்சியும் செல்வமும், அத் தொழிலாளியின் இன்ப வாழ்க்கைக்கு முன் சிறிதாகக் காணப்படுதலைக் கண்டான். அவனுடைய

[தொடர்ச்சி 7-ம் பக்கம்]

பதிந்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)